**அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம்.**

Re-accredited with 'A' Grade by NAAC & Affiliated to Bharathidasan University

<u>தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம்</u>

சுற்றறிக்கை - 11

நாள்: 17.10.2022

## நவம்பர் 2022 பருவத்தேர்வுக் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக

2022-2023 கல்வியாண்டில் பயிலும் இளநிலை மற்றும் முதுநிலை மாணாக்கர்களுக்கான ஒற்றைப் பருவத் தேர்வுக் கட்டணத்தை இணையவழியில் மட்டுமே (www.gacakum.ac.in) செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தும் முன் மாணாக்கர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்**

Google Search

↓

www.gacakum.ac.in

↓

Examination link

↓

Online Payment (Sem. Exam fee) செல்ல வேண்டும்.

அடுத்து மாணாக்கர்கள் பதிவெண்ணை கீழே உள்ள மாதிரியைப் போன்று பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். **(Example: T 22 MA 6001 , T இடைவெளி 22 இடைவெளி MA இடைவெளி)**

பதிவெண் வந்தவுடன் திரையில் தெரியும் செலுத்த வேண்டிய மொத்தத்தொகையை தேர்வு விண்ணப்பக் கட்டணத்துடன் ஒப்பிட்டு உறுதிசெய்துகொண்டு மாணவரது கடன் அட்டை (Debit Card) அல்லது வரவு அட்டை (Credit Card), அல்லது UPI (ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம்) அல்லது இணையவழி கணக்கு (Net Banking) மூலம் ஏதேனும் ஒரு வழியை தேர்ந்தெடுத்து செலுத்த வேண்டும்.

இணைய முகப்பு (Portal) **26.10.2022** முதல் **02.11.2022** தேதி வரை மட்டுமே செயல்படும்

மேற்கண்ட நாளுக்குள் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்த இயலாத மாணாக்கர்கள் ரூ.**300/-** அபராதத் தொகையுடன் வங்கியில் நேரடியாக (IOB Court Branch) தேர்வுக் கட்டணம் செலுத்த இறுதி நாள் **05.11.2022** ஆகும்.

**<u>இதற்குப் பிறகு தேர்வுக் கட்டணம் செலுத்த அனுமதிக்க இயலாது என்று தெரிவிக்கலாகிறது.</u>**

தேர்ச்சி பெறாமல் படிப்பு முடித்து வெளியில் சென்ற மாணாக்கர்கள் **(Re-Appear Students)** விண்ணப்பம் மற்றும் செலுத்துச்சீட்டினை தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் பெற்று உரிய கட்டணத்தொகையை IOB Court Branch வங்கியில் நேரில் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தி நிறைவு செய்த தேர்வு விண்ணப்பத்துடன் Transaction Status SUCCESS ரசிதியினை (E_Receipt) இணைத்து துறைத்தலைவர் பரிந்துரையுடன் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் ஒப்படைக்க இறுதி நாள் **07.11.2022** ஆகும்.

தேர்வுக் கட்டணம் செலுத்திய மற்றும் செலுத்தாத மாணவர்களின் விண்ணப்பங்களை தனித்தனியே தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு துறைத்தலைவர்கள் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு: இணையவழியில் கட்டணம் செலுத்துவதில் இடர் ஏற்படின் (தவிர்க்க இயலாத நிலையில்) மாணாக்கர்கள் துறை ஆசிரியர்கள்/ கணினி அறிவியல் துறை ஆசிரியர்கள்/கணினிப் பயன்பாட்டியல் துறை ஆசிரியர்கள்/நூலகர் உதவியை நாடவும்.

17/10/2022

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

தேர்வுக் கட்டுபாட்டு அலுவலர்
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்-612 001

17/10/2022

முதல்வர் (பொ)

முதல்வர்
அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்-612 001

நகல்: அனைத்துத் துறைத்தலைவர்கள், தகவல் பலகை, கல்லூரி நூலகம், கல்லூரி இணையதளம்.